## <u>நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

## <u>சி.சி.148/2019</u>

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.11வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளங்கோவன் ஏ. | வயது | 40 |
| த.பெ.(அ)க.பெ. | அம்மாசி | தொழில் | தலைமைக்காவலா் |
| ஊர் | சேலம் | சமயம் | |
| வட்டம் | சேலம் | சாதி | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சேலம் இருப்புபாதை காவல் நிலையத்தில் தலமைக்காவலராக பணிபுாிந்து வருகிறேன். நான் கடந்த 2017ம் ஆண்டு எதிாிகள் சம்பந்தப்பட்ட குற்ற எண்கள்.53/2017 மற்றும் 117/2017 ஆகிய வழக்குகளில் விசாரணை அதிகாாியாக இருந்த திருமதி ஜெயந்தி அவா்களுக்கு எதிாிகளை பிடி்ப்பதற்கும் அவா்களை காவல் நிலையத்தில் எடுத்து விசாாிப்பதற்கும் மற்றும் வழக்கு சொத்தினை கைப்பற்றுவதற்கும் நானும் என்னுடன் காவலா் திரு.வினோத்குமாா் அவா்களும் உடனிருந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

விசாரணைக்காக எதிரிகளை காட்பாடி காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள், இவ்வழக்கில் எதிரிகள் பார்மல் அரஸ்ட் செய்யப்பட்டு ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார்கள். எனது மேல் அதிகாரி காட்பாடி காவல் நிலையத்தில் பார்மல் அரஸ்ட் செய்தாரா என்றால் இல்லை நீதிமன்ற உத்திரவு மூலம் எதிரிகள் இவ்வழக்கில் போலீஸ் கஸ்டடி முலமாக ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார்கள். நான் எதிரிகளை காட்பாடி காவல் நிலையம் அழைத்து வரும்போதே காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். மேற்படி காட்பாடி காவல் நிலையத்திலிருந்து எதிரிகளை விசாரணை செய்து ஜோலார்பேட்டைக்கு அழைத்து வந்தோமா என்றால் இல்லை நாங்கள் மீண்டும் பார்மல்அரஸ்ட் செய்துதான் அழைத்து

வந்தோம். எப்போது சம்பிராதாய கைது செய்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் நீதிமன்றத்திலிருந்து சம்பிராதாய கைது உத்திரவோ அல்லது பி.டி. வாராண்டோ பெறவில்லை. இவ்வழக்கில் 1, 2 எதிரிகள் தான் மேற்படி சம்பிராதாய கைது செய்யப்பட்டவர்கள். எந்த தேதியில் அவர்களை நாங்கள் ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் 2017ம் வருடம் நவம்பர் மாதம் தேதி ஞாபகமில்லை. மேற்படி இரண்டு எதிரிகளையும் ஒரே நேரத்தில் அழைத்து வந்தோமா என்றால் இல்லை. எதிரிகளை காவலில் எடுத்து அவர்களிடம் ஒப்புதல் வாக்குமுலம் பெற்று அதில் பகலம்மாளை மும்பை அழைத்து சென்று அங்கு பொருட்கள் எதுவும் கிடைக்காததால் பகலம்மாள் வீடான ரேணிகுண்டாவிற்கு வந்து பொருட்களை கைப்பற்றினார்கள். ரேணிகுண்டாவில் எதிரி பகலம்மாள் எந்த பகுதிக்கு அழைத்து சென்றார் என்று சரியாக நினைவில்லை. மேற்படி ரேணிகுண்டாவில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களுக்கு அங்கிருந்த நபர்களை சாட்சியாக போட்டோம். மேற்படி சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. 2ம் எதிரியை அழைத்து செல்லும் போது உடன் 1ம் எதிரியை அழைத்து சென்றோமா என்றால் அவரையும் தான் அழைத்து சென்றோம். 1ம் எதிரி அலமேலுவிடம் அன்றைய தேதியில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அலுமேலுவிடம் எந்த தேதியில் பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று நினைவில்லை. நான் கைப்பற்றப்பட்ட பொருளுக்கு எந்த சாட்சி கையெழுத்தும் போடவில்லை. மேற்படி காவல் நிலையத்தில் வைத்து வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமுலத்தில் யார் கையெழுத்திட்டது என்றால் சரியாக நினைவில்லை. நான் மேற்படி காவல் ஆய்வாளருடன் இருந்ததாக சொல்வது தவறு என்றாலும் உண்மையிலேயே நான் இருந்திருந்தால் இவ்வழக்கில் நடந்த சங்கதிகளை அப்படியே சொல்லியிருப்பேன் என்றாலும் நான் மேற்படி ஆய்வாளருடன் இல்லாததால் தான் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் மேல் அதிகாரி போட்ட தவறான வழக்கிற்கு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை